1970 மார்ச் 4]

கடல் நீரைக் குடிநீராக்கல்

* 208. வினா.—திரு. என் கிட்டப்பா

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் குறித்து வெளிநாட்டு நிபுணர்கள் யாருடனாவது மாநில அரசு கலந்தாலோசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், இத்திட்டம் செயல்படுத்தப்படும் சாத்தியக் கூறுகள் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) கடல் நீரைக் குடிநீராக மாற்றுவது குறித்து நமது அழைப்பின்பேரில் 1964-ல் சென்னைமாநகருக்கு வந்த ஐக்கிய நாடுகள் வல்லுநர் குழுவைக் கலந்து அரசாங்கம் ஆய்வு செய்தது. நகரத்திற்குக் குடிநீர் வழங்குவதைப் பெருக்குவதற்காக இதை விடக் குறைந்த செலவுள்ள பிற திட்டங்கள் நிறைவேற்றப்படும் வரையில் இத்திட்டத்தைத் தள்ளி வைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1964-ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த முயற்சியின்படி கடல் நீரைக் குடிநீராக ஆக்குவதற்கு எவ்வளவு செலவு ஆகும் என்று சொன்னார்களா ? அது ஏன் ஒத்திவைக்கப்பட்டது ? அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, 1964-ஆம் ஆண்டு யு.என். எக்ஸ்பர்ட் டீம் வந்து பரிசீலனை செய்தார்கள். அதற்காக வேண்டிய செலவு அதிகமாக இருக்கும் என்று புள்ளி விவரம் கொடுத்தார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்தின்படி ஆயிரம் காலன்களுக்கு சராசரி 1.30 பைசா ஆகும். ஆனால் மின்சாரத்தைப் பயன் படுத்தி கடல் நீரைக் குடிநீராக்கினால், ஆயிரம் காலன்களுக்கு 2 ரூபாய் முதல் 4 ரூபாய்வரை செலவாகும் என்று சொல்லப்படுகிறது. எனவே செலவு இரண்டு பங்கு மூன்று பங்கு அதிகமாகும் என்ற காரணத்தினாலே தற்சமயத்தில் அந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு கிராம அலுவலர் சங்கம்

* 156. வினா.—**திரு. எஸ். இராமச்சந்திரன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாண்புமிகு முன்னாள் உணவு அமைச்சர் அவர்களைத் தமிழநாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கப் பிரதிநிதிகள் 1967 டிசம்பர் திங்களில் சந்தித்து கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்பத்தை கொடுத்தனரா ?

(இ) அப்படியானால் அதன் விபரங்கள் யாவை?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மன்றப் பேரவைமுன் விவா அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அவர்களுடைய கோரிக்கைகளில் ஐந்தாவதாக போதிய சம்பளம், அகவிலைப் படி உயர்வு சம்பந்தமாக ரெவின்யு போர்டுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது எந்த நிலையில் இருக்கிறது? அடுத்து நான்காவது இரண்டாவது கோரிக்கைகளாக ஊராட்சியைப் பொறுத்தவரையிலும் பஞ்சாயத்து, ரெவின்யூ என்ற இரட்டை ஆட்சியாக இருப்பதை மாற்றி இரண்டையும் ஒருங்கிணைத்து வில்லேஜ் கர்ணத்தைப் பஞ்சாயத்து செகரட்டரியாகப் போட்டு கிராமக் கர்ணம் பொறுப்பில் உள்ள ரிக்கார்டுகளை பஞ்சாயத்தினுடைய பொறுப்பிலே ஒப்படைக்கும்படியான திட்டத்தை ஏன் ரெவின்யூ போர்டு நிராகரித்தது என்பதை நிதியமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கிராம அலுவலர்களைப் பஞ்சாயத்துக்களுடைய காரியதரிசியாகப் போட்டு ஓட்டுக் கொடுக்க முடியாத மெம்பராக ஏற்படுத்துவது அவசியமல்ல. அதற்கான காரணங்கள் தேவையில்லை என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அறிவார்கள். முன்பு வெளி நாட்டிலிருந்து வந்த சிலர் சில குறிப்பிட்ட காரியங்களுக்காக இந்த ஏற்பாட்டை அமைத்தார்கள். ஆனால் இன்றைக்கும் அது தேவையாக இருக்கிறது. இருந்தாலும் மக்களுடைய உணர்வுகளுக்கும் அவர்களுடைய எண்ணங்களுக்கும் பிரதிபலிப்பாக இருக்கிற முறை ஊராட்சி முறையாகும். இன்னும் அந்த முறை தேவையாக இருக்கிறது என்ற காரணத்தினால்தான் அது நிராகரிக்கப்பட்டது. ஊதியம் முதலியவற்றைப் பொறுத்தவரையில் முதன்முறையாக அது சம்பளக் குழுவுக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. எனவே அதுவும் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, with regard to item No. 10 in the Paper placed on the table of the House, namely 'in the matter of appointment priority to be given to the legal heirs it is stated that the matter is under the consideration of the Government. Other things being equal if the heirs of the village officers satisfy the standards required for the post of a Village Officer, will the Government consider their case also?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The Government entirely agree with the suggestion of the hon. Member. Other things being equal, the heirs of the village officers would be given due consideration.

102-108-ம் பக்கங்களின் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.